முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம் Provincial Department of Education, Northern Province

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

51 T I,II

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர ) பரீட்சை, 2025
**General Certificate of Education (Ord. Level) Examination, 2025**

நாடகமும் அரங்கியலும் I, II
**Drama & Theatre I, II**

மூன்று மணித்தியாலம்
**Three Hours**

---

**அறிவுறுத்தல்கள்**

*எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக

*இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிவுசெய்க.

---

## பகுதி I

(1) நாடகத்தின் மூலக்கூறுகளில் பிரதானமான ஒன்றாக அமைவது
(1) எழுத்துரு ஆகும் (2) நடிகன் ஆகும் (3)வேட உடை ஆகும் (4)காட்சி ஆகும்

(2) பின்வருவனவற்றுள் வெற்றி தோல்வியற்ற அரங்க விளையாட்டாகக் கருதக்கூடியது
(1) ஆடும் வீடும் (3) செவின்அப்
(2) சின்னப்பானை பெரியபானை (4) கந்தையாண்ண சொல்கிறார்.

(3) காமன் கூத்து ஆடப்படும் பிரதேசம்

(1) மன்னார் (2) மலையகம். (3) மட்டக்களப்பு (4) வவுனியா

(4) பின்வருவனவற்றுள் அரங்க விளையாட்டு தொடர்பான பொருத்தமற்ற கூற்று எது?
(1) நடிப்பாற்றலை விருத்தி செய்யக் கூடியவை.
(2) விளையாட்டின் போது காயங்கள் ஏற்படலாம்.
(3) வெற்றி தோல்வியை மாத்திரம் கொண்டவை.
(4) ஒற்றுமை, உடல் உளச்சமநிலையை உண்டுபண்ணக் கூடியவை.

(5) படைப்போனின் துணையின்றி நயக்கக் கூடிய கலைவடிங்களை மாத்திம் கொண்ட தொகுதி
(1) இசை, நடனம், ஓவியம் (3) வில்லுப்பாட்டு, சிற்பம், ஓவியம்
(2) இசை, நடனம், வில்லுப்பாட்டு (4) கட்டடம், சிற்பம், ஓவியம்

(6) கூத்து, பலே, கதகளி போன்ற ஆற்றுகை வடிவங்களில் முனைப்புறுத்தப்படும் சித்திரிப்பு வகை

(1) உடல்வழிச் சித்திரிப்பு (2) உணர்ச்சிவழிச் சித்திரிப்பு
(3) குரல்வழிச் சித்திரிப்பு (4) காண்பியவழிச் சித்திரிப்பு

(7) புதியதொருவீடு நாடகத்தை எழுதியவர்

(1) குழந்தை ம.சண்முகலிங்கம் (2) இளைய பத்மநாதன்
(3) மஹாகவி து.உருத்திரமூர்த்தி (4) காரை சுந்தரம்பிள்ளை

(8) நாடகமொன்றின் வெற்றிதோல்வியை தீர்மானிப்பவர்

(1) தயாரிப்பாளர் 2. நெறியாளர் 3. மேடைமுகாமையாளர் 4. பார்ப்போர்

(9) லங்கா சுபோத விலாச சபையைத் தோற்றுவித்தவர்

(1) நடிகமணி வி.வி வைரமுத்து (2). காரை சுந்தரம்பிள்ளை
(3) கலையரசு சொர்ணலிங்கம் (4). பம்பல் சம்பந்த முதலியார்

(10) மரபுவழிக் கூத்தில் சட்டம் கொடுத்தல் என்பது

(1) மேடையைக் குறிக்கும்
(2) பாத்திரத் தெரிவைக் குறிக்கும்
(3) ஓப்பனைப் பொருளைக் குறிக்கும்
(4) ஏட்டுப் பிரதி வழங்குவதைக் குறிக்கும்

(11) “என்னடி உந்தன் கோப்பியில் ……” என்ற பாடல் இடம் பெறும் நாடகம்

(1) பொறுத்தது போதும் (2). சக்தி பிறக்குது
(3) ஊயிர்த்த மனிதர் கூத்து (4). சங்காரம்

(12) அரங்கிற்கான இசையின் நேக்கங்களில் ஒன்றாக அமைவது

(1) பாத்திரங்களின் குரலை மெருகூட்டுவதற்காக
(2) நாடகப் பாடலுக்கு மெட்டைத் தருவது
(3) நாடகத்திலுள்ள உணர்ச்சிக் கட்டங்களின் தாக்கத்தை மேம்படுத்துவதற்கு
(4) நாடகத்தைக் கவர்ச்சியாக்குவதற்கு

(13) நாடகம் ஒன்றிற்கான விளம்பரத்தினை மேற்கொள்பவர்

(1) நாடக ஆசிரியர் (2). தயாரிப்பாளர்
(3) நெறியாளர் (4). மேடை முகாமையாளர்

(14) வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் என்ற நூலை எழுதியவர்

(1) காரை சுந்தரம்பிள்ளை (2). வி.விவைரமுத்து

(3) சு.வித்தியானந்தன் (4). சி.மௌனகுரு

(15) யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பெரும்பாலும் ஆடப்படும் கூத்து வடிவம்

(1) வடமோடிக் கூத்து (2). காத்தவராயன் கூத்து

(3) தென்மோடிக் கூத்து (4). வசந்தன் கூத்து

(16) கதவடித்துப் பாடுதலுடன் தொடர்புடைய சடங்கு எது?

(1) வேட்டைத் திருவிழா (2). சூரன் போர்

(3) குளுர்த்தி (4). காடேறித்திருவிழா

(17) வடமோடிக் கூத்துத் தொடர்பான பொருத்தமற்ற கூற்று எது?

(1) வடநாட்டுக் கதைகளை அடிப்படையாகக் கொண்டவை

(2) கந்தார்த்தம் என்ற பாடல் மெட்டு அதிக முக்கியத்துவமுடையது

(3) நடிகர்களே வரவுப்பாடலைப் பாடி ஆடுவர்

(4) காதல்,சோகம், காதலின் வெற்றி போன்ற கதைகளை அடிப்படையாகக் கொண்டவை

(18) வஞ்சிப்பத்தன் எனும் பாத்திரம் இடம்பெறும் கூத்து வடிவம்

(1) தர்ம புத்திரன் கூத்து (2)காத்தவராயன

(3) கோவலன் கூத்து (4) வசந்தன் கூத்து

(19) மனோரதிய நாடகங்களின் காட்சியமைப்பு பெரும்பாலும்

(1) சாதாரண வாழ்வு நிலைப் பட்டதாகும்

(2) குறியீட்டுத் தன்மை கொண்டதாகும்

(3) அழகும் ஆடம்பரமும் நிறைந்ததாகும்

(4) யதார்த்தமானதாகும்

(20) இலங்கைக்கு இசை நாடகங்களை அறிமுகஞ் செய்தவர்

(1) நாட்டுக்கோட்டைச் செட்டிமார்

(2) பார்ஸி நாடகக் கம்பனிகள்

(3) பட்டுக்கோட்டை செட்டிமார்

(4) விக்டோரியன் நாடகக் குழுக்கள்

(21) இசை நாடகத் துறையில் காதர் பச்சா, ஜேன் கவாஸ் போன்றவர்கள் பயன்படுத்திய வாத்தியக் கருவி

(1) மிருதங்கம் (2). தபேலா (3). உடுக்கு (4). ஹார்மோனியம்

(22) ஏழு மலட்டு ராணிகளுடன் தொடர்புடைய சடங்கு

(1) கொஹொம்பகங்காரிய (2). சன்னியக்கும (3) .ரட்டயகும (4) .பகன்மடுவ

(23) நாடகமொன்றின் கடைசி ஒத்திகை எவ்வாறு அழைக்கப்படும்

1. தொழிநுட்ப ஒத்திகை
2. கடைசி ஒத்திகை
3. வாசிப்பு ஒத்திகை
4. வெள்ளுடுப்பு ஒத்திகை

(24) கலையரசு சொர்ணலிங்கத்திற்கு புகழீட்டிக் கொடுத்த பாத்திரங்கள்

1. சைலொக், கூனி
2. கிருஸ்ணர், சுபத்திரை
3. கிருஸ்ணர், கூனி
4. சைலொக், சுபத்திரை

(25) பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகமல்லாதது

(1) பொருளோ பொருள்
(2). பொறுத்தது போதும்
(3) தவறான எண்ணம்
(4) .சுந்தரம் எங்கே

(26) புதியதொரு வீடு நாடக மோடி எவ்வகை சார்ந்தது

(1) யதார்த்தம்
(2). மோடிமை கலந்த யதார்த்தம்
(3) யதார்த்த விரோதம்
(4). யதார்த்தம் கலந்த மோடிமை

(27) அவைக்காற்றுக் கலைக்கழகம் தயாரித்த ஒரு பாலை வீடு எனும் நாடகத்தின் மூல நாடகாசிரியர்

1. ஹென்றிக் இப்சன்
2. அலெக்சி அபுசேவ்
3. கார்ஸியாலோகா
4. அன்ரன் செக்கோவ்

(28) ஈழத்தில் யதார்த்த வாத நாடகங்களினை ஆற்றுகை செய்த அரங்கவியலாளர்

1. சி.மௌனகுரு
2.கா.சிவத்தம்பி
3. க.கணபதிப்பிள்ளை
4.க.சிதம்பரநாதன்

(29) பின்வருவோரில் ஈழத்தின் தமிழ் நாடகவரலாற்றின் நவீன நாடகத் தந்தையாகக் கொள்ளப்படுபவர்

(1) இ.முருகையன்
(2). து.உருத்திரமூர்த்தி
(3) கலையரசு சொர்ணலிங்கம்
(4). அம்பி

(30) ஆரொடு நோகேன் என்ற நாடகத்தை எழுதியவர்

1.கா.சிவத்தம்பி
2. சி.மௌனகுரு
3. எ.ரி.பொன்னுத்துரை
4. குழந்தை ம.சண்முகலிங்கம்

(31) வாய் மொழியைப் பயன்படுத்தாத ஆற்றுகை வடிவம்

1. இசைநாடகம் 2. ஊமம் 3. ஒபேறா 4. வில்லுப்பாட்டு

(32) பின்வரும் உரையாடலைக் கவனியுங்கள்

"நெடுதூரம், நீண்ட நாள் ஓடி நினைவெல்லாம் நீயாக மீண்டேன் இதுவோ விளைய இருந்ததம்மா"

என்ற புதியதொர வீடு நாடக உரையாடலை உரையாடும் பாத்திரம்?

(1) மாசிலன (2) மயிலி (3) மாயன். (4)மறைக்காடார்.

(33) பாண்டவர் வனவாசச் சடங்குடன் தொடர்புடைய அம்மன்

(1) திரெளபதி அம்மன் (2). கண்ணகி அம்மன்
(3) காளி அம்மன் (4). மாரி அம்மன்

(34) மக்கள் களரி எனும் நாடக நிறுவனத்தின் ஸ்தாபகர்

(1) தர்மஸ்ரீ பண்டாரநாயக்க (2). எதிர்வீர சரச்சந்திர
(3) பராக்கிரம நிரியல்ல (4). குணசேன கலபதி

(35) நடிகர் தெரிவு முறைகளில், நெறியாளர், தயாரிப்பாளர் முன்னிலையில்,நடிகர்களைத் தனித்தனியாக அழைத்துத் தெரிவு செய்யும் முறை எவ்வாறு அழைக்கப்படும்?

1. திறந்த தெரிவு 2. மூடிய தெரிவு
3. சல்லடைத் தெரிவு 4. புதுதளித்தல் முறை

- **பின்வரும் படங்களை அவதானித்து அதன் கீழுள்ள 36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.**


A


B


C


D


E

(36) ஈழத்தில் மொழிபெயர்ப்பு நாடகங்களை அதிகம் மேடையிட்டவர்

1. B 2. C 3. D 4. E

(37) புதியதொரு வீடு நாடகத்தின் முதல் நெறியாளர்

1. A 2. B 3. C 4. D

(38) திருமறைக்கலா மன்றத்தின் ஸ்தாபகர்

1. A 2. B 3. C 4. D

(39 படம் . C குறித்து நிற்கும் அரங்க ஆளுமை

1. பேராசிரியர் சு.வித்தியானந்தன்
2 மரியசேவிய அடிகளார
3.அ. தாசீசியஸ்
4. பேராசிரியர் சி. மௌனகுரு

(40) படம் D குறித்து நிற்கும் நாடக ஆளுமையின் பிரமாண்ட படைப்பாக அமைவது

1.காத்தவராயன் கூத்து.
2. இராவணேசன் கூத்து
3 கோவலன் கூத்து
4. காமன் கூத்து

(40$\times 1 = 40$ புள்ளிகள்)

முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்
Provincial Department of Education, Northern Province

51 T I,II

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர ) பரீட்சை, 2025
General Certificate of Education (Ord. Level) Examination, 2025

நாடகமும் அரங்கியலும் II
Drama & Theatre II

மூன்று மணித்தியாலம்
Three Hours

- **முதலாம் வினாவுக்கும் ஏனையவற்றில் எவையேனும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஈழத்தமிழரின் பாரம்பரிய நாடகவடிவம் எது? (01 புள்ளி)
2. அரங்க விளையாட்டு என்றால் என்ன? (01 புள்ளி)
3. அரசனின் புத்தாடை நாடகத்தை எழுதியவர் யார்? (01 புள்ளி)
4. அண்ணமார் வழிபாட்டுடன் தொரடர்புடைய கூத்து எது? (01 புள்ளி)
5. ஈழத்துத் தமிழ் நவீன நாடத் தந்தை யார்? (01 புள்ளி)
6. அண்ணரவியார் நாடகமரபு என அழைக்கப்படும் நாடக வடிவம் எது? (01 புள்ளி)
7. உடற் பயிற்சியாக அமையக் கூடிய அரங்கவிளையாட்டு ஒன்று தருக? (01 புள்ளி)
8. குழந்தை ம. சண்முகலிங்கத்தின் முதலாவது நாடகம் எது? (01 புள்ளி)
9. வடமோடிக் கூத்து இரண்டு தருக? (02 புள்ளிகள்)
10. யதார்த்த மோடி நாடகங்கள் இரண்டு தருக? (02 புள்ளிகள்)

(02)

i) ஆற்றுகைக்கலைகள் நான்கு தருக? (04 புள்ளிகள்)

ii) நாடகக் கலையின் பிரதான பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக? (04 புள்ளிகள்)

iii) நாடகமானது, வானொலிநாடகத்தில், இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதனைக் குறிப்பிடுக? (04 புள்ளிகள்)

(03)

i) கூத்தின் அழகியற்பண்புகள் நான்கு தருக. (02 புள்ளிகள்)

ii) இலங்கைத் தமிழரிடையே பயில்நிலையிலுள்ள கூத்து வடிவங்கள் நான்கினைக் குறிப்பிடுக 02 புள்ளிகள்)

iii) மேலே குறிப்பிட்ட கூத்துக்கள் இரண்டினைத் தெரிவு செய்து அவற்றின் சிறப்பியல்புகளை விளக்குக (08 புள்ளிகள்)

(04)

i) நெறியாள்கைஎன்றால் என்ன? (02 புள்ளிகள்)

ii) நெறியாளர் ஒருவருக்கு இருக்கவேண்டிய தகுதிகள் ஐந்து தருக? (05 புள்ளிகள்)

iii) தயாரிப்பாளர் ஒருவரின் கடமைகள் ஐந்து தருக? (05 புள்ளிகள்)

(05)

i) “ஆரொடு நோகேன்”நாடகத்தின் கரு, முரண்பாடு என்பவற்றைக் குறிப்பிடுக? (04 புள்ளிகள்)

ii) “ஆரொடு நோகேன்”நாடகத்தில் உமக்கு பிடித்த பாத்திரம் ஒன்றினைக் குறிப்பிட்டு அதற்கான காரணத்தை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

iii) புதியதொருவீடு நாடகத்தில் காணப்படும் மோடிமைப் பண்புகளை குறிப்பிடுக (04 புள்ளிகள்)

(06 பின்வருவோர் ஈழத்து நாடக வரலாற்றிற்கு ஆற்றிய பங்களிப்புக்களை குறிப்பிடுக

i) கலையரசு சொர்ணலிங்கம்

ii) நடிகமணி வி.வி வைரமுத்து

iii) குழந்தை ம.சண்முகலிங்கம் (03$\times 04 = 12$ புள்ளிகள்)

(07) பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக

i] சிறுவர் அரங்கு

ii] வேட்டைத் திருவிழா

iii] கூத்துப் புத்தாக்கம்

iv] அரங்க விளையாட்டு (03$\times 04 = 12$ புள்ளிகள்)

***